செய்தி வெளியீடு எண்:02 **பத்திரிக்கைச்செய்தி** நாள்: **02.01.2013**

மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் ஆணையின்படி, தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற ஒரு கோடியே 97 இலட்சம் குடும்ப அட்டைகளில் உள்தாள் ஒட்டி மேலும் ஒரு வருட காலத்திற்கு புதுப்பித்துக் கொள்ளும் பணியினை, மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு.இரா.காமராஜ் அவர்கள் இன்று காலை (02.01.2013) சென்னை கோபாலபுரம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக நியாயவிலை அங்காடிகள் MA015, MA016, MA017, ஆகியவற்றில் ஆய்வு செய்தார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் அறிவுரைகளின்படி, குடும்ப அட்டைதாரர்கள் எவ்வித சிரமமின்றி தங்கள் அட்டைகளை உள்தாள் ஒட்டி புதுப்பித்து கொள்ளும் நடைமுறைகள் 01.01.2013 முதல் மாநிலம் முழுவதும் தொடங்கப்பட்டது. இன்று ஆய்வு மேற்கொண்ட மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர், குடும்ப அட்டைதாரர்களுக்கு உள்தாள் ஒட்டியவுடன் அவர்களுக்கு தேவையான அனைத்து அத்தியாவசியப் பொருள்களையும் உடனுக்குடன் வழங்க வேண்டுமென்றும், சுழற்சி முறையில் குறிப்பிட்ட தேதியில் போதுமான அளவுக்கு அட்டைதாரர்கள் வரவில்லையெனில், வேறொரு தேதியில் குறிப்பிட்ட அட்டைதாரர்கள் அங்காடிக்கு வந்தால், அங்காடி ஊழியர்கள்

குடும்ப அட்டைதாரர்களை திரும்ப அனுப்பாமல், அவர்களது அட்டைகளில் உள்தாள் ஒட்டி புதுப்பிக்கும் பணியினை செய்யலாம் என்றும் தெரிவித்தார். மேலும் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு குடும்ப அட்டைதாரர்கள் அனைத்து பொருள்களையும் முன்னதாகவே பெறும் வகையில் தரமான பச்சரிசி, துவரம்பருப்பு, உளுத்தம்பருப்பு, செறிவூட்டப்பட்ட பாமாயில் மற்றும் சர்க்கரை, கோதுமை, ஆகியன போதுமான அளவில் இருப்பு வைக்கப்பட்டுள்ளதை அங்காடிகளில் உறுதி செய்தார். ஆய்வின் போது அங்காடிக்கு வந்திருந்த குடும்ப அட்டைதாரர்களுக்கு உள்தாள் ஒட்டி புதுப்பிக்கப்பட்ட அட்டைகள் வழங்கப்படுவதையும் பார்வையிட்டார். அங்காடிகளில் தரமான பொருள்கள் எடை குறைவின்றி வழங்கப்படுவதையும் உறுதி செய்தார்.

இந்த ஆய்வின் போது அரசு செயலர், திருமதி M.P.நிர்மலா,இ.ஆ.ப., குடிமைப் பொருள் வழங்கல் துறை ஆணையாளர் திரு.பி.எம்.பஷீர்அஹமது,இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக நிர்வாக இயக்குநர் திரு.எம்.சந்திரசேகரன்,இ.ஆ.ப., முதுநிலை மண்டல மேலாளர்கள் திரு.பாஸ்கரன், திருமதி.ஜெயந்தி ஆகியோர் உடனிருந்தனர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**